தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 3, ஆங்கீரச - திருவள்ளுவர் ஆண்டு 2024

1993, மார்ச் 16, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

" குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு. "

குடிமக்களைக் காத்து செங்கோல் ஆட்சி புரியும் மன்னனை உலக மக்கள் அனைவரும் விரும்பி போற்றி, அவனை வழிபட்டு நிற்பார்கள்.

1. வினாக்கள்-விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 81, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு நிதியமைச்சர்.

81 --

அரசு ஊழியர்களின் வருமான வரியை மாதந்தோறும் ஊதியத்திலிருந்து வசூலித்தல்

* 14251–**டாக்டர் வெ. சரோஜா :**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) தமிழ்நாட்டில் அரசு ஊழியர்களுடைய வருமான வரியை மாதந்தோறும் சம்பளத்திலிருந்து வசூலிக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

[1993 மார்ச் 16

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதியமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசு ஊழியர்களின் சம்பளத்திலிருந்து வருமான வரியினை அந்தந்த நிதியாண்டின் இறுதிக்குள் வசூலிப்பதற்குரிய வருமான வரி சட்ட வழிமுறைகள் ஏற்கனவே நடைமுறையில் உள்ளன. மத்திய அரசின் சுற்றறிக்கையின்படி அரசு ஊழியர்களின் ஆண்டு வருமான அடிப்படையில் வருமானவரி கணக்கிடப்பட்டு பிடித்தம் செய்யப்பட வேண்டும். இவ்வருமானவரி அரசு ஊழியர்களின் சம்பளத்திலிருந்து மாதத் தவணை முறையில் (12 தவணைகள் அந்தந்த நிதி ஆண்டுக்குள்) பிடிக்கலாம், அல்லது அரசு ஊழியர்கள் தனியாகவும் இவ்வரியை நேரிடையாகச் செலுத்தலாம். இது தவிர வருமானவரியை மொத்தமாகவும் அரசு ஊழியர்கள் சம்பளத்திலிருந்து, அந்தந்த நிதி ஆண்டுக்குள் பிடிக்கலாம்.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கூறினார்கள். இதில் "ஆப்ஷன்"-ஆக இருப்பதை கட்டாயமாக வருமான வரியை வசூலிக்கும் திட்டத்தை அரசு செயல்படுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே குறிப்பிட்டபடி அரசு ஊழியர்கள் சம்பளத்திலிருந்து வருமான வரியினை அந்தந்த நிதியாண்டுக்குள் வசூலிப்பதற்கான விதிமுறைகளை மத்திய அரசுதான் வகுத்துத் தந்திருக்கிறது. ஆக மத்திய அரசு வகுத்த இந்த மூன்று வகைகளிலே எதாவது என்றை ஊழியர்கள் பின்பற்றலாம். மத்திய அரசு ஊழியர்களானாலும் சரி, மாநில அரசு ஊழியர்களானாலும் சரி, இந்த முறையைப் பின்பற்றலாம். ஒன்று மாதாமாதம் வேண்டுமானாலும் அவர்கள் செலுத்தலாம், அல்லது சம்பளத்திலிருந்து பிடித்துக் கொண்டும் செலுத்தலாம். அல்லது ஒட்டுமொத்தமாகவும் அவர்கள் செலுத்தலாம் என்ற விருப்பத் தன்மையை மத்திய அரசு சட்ட விதிதான் தருகிறது. மாநில அரசு இதிலே ஒரு மாற்றமும் செய்வதற்கில்லை.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு அலுவலர்களை ஏ, பி, சி, டி என்று நான்கு வகைப்படுத்தி, அதிலே பி அண்டு சி பிரிவினர் அதிகமாக பாதிப்பிற்கு உள்ளாகிறார்கள். குறிப்பாக ஜனவரி மாதத்தில் பொங்கல் விழா, மார்ச் மாதத்தில்

1993 மார்ச் 16]

வருமான வரி, ஜுன் மாதத்தில் குழந்தைகளுடைய கல்வி என்று தொடர்ந்து ஆறு மாதங்களுக்கு பெற்றோர்கள் மிகவும் அவதிப்படுவதால் பி அண்டு சி பிரிவினருக்காவது இறத கட்டாயமாக்க மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருமான வரியை எப்படியும் அசூலித்துத்தான் தீரவேண்டும். ஆகவே இந்த மூன்று முறைகளிலே எந்த முறை என்பது தான் கேள்வி. விருப்பத்தன்மை தரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று பி, சி பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் ஒன்றாக உட்கார்ந்து யோசித்து, இந்த முன்று பிரிவுகளிலே எந்தப் பிரிவு தங்களுக்கு ஏற்றது என்பதைச் சொல்வார்களேயானால், அந்த ஒரு பிரிவை தமிழகத்தைப் பொறுத்தவரையாவது நடைமுறைப் படுத்துவதற்கு நாம் முயற்சி செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். எஸ். ராமசுப்பு,

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் வருமான வரியைக் கட்டுவதற்கு, அந்த ரிடர்ன்கள் கொடுப்பதற்கு சில நேரங்களிலே அவர்களுக்கு இடர்ப்பாடுகள் ஏற்படுவதனால் வங்கிகளில் எல்லாம் ஆங்காங்கே ரிடர்ன்கள் கொடுப்பதற்கு சில டிபார்ட்மெண்டுகளை ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். அதைப்போல அரசு அலுவலகங்களில் எல்லாம் இதற்கென்று ஒரு தனி டிபார்ட்மெண்ட் ஏற்படுத்தி அரசு ஊழியர்களுக்கு வசதியாக இன்கம் டாக்ஸ் ரிடர்ன்களைக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருமான வரியை வசூலித்துத் தருகின்ற பொறுப்பை மாநில அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுவது போன்று இதிலே இருக்கின்ற சங்கடங்கள் என்ன என்பதை ஊழியர்கள் தெரிவிப்பார்களேயானால், அவர்களுக்குச் சாதகமான முறையில், பாதகம் ஏற்படாத வகையில் வருமான வரியை குறிப்பிட்ட காலத்திற்குள் வசூலிப்பதற்கு ஏற்ற தன்மையில் வேண்டுமானால், அதற்கான முறைகளை நாம் மேற்கொள்ளலாம். அவர்கள் அதற்கான வேண்டுகோளை வைப்பார்களேயானால், அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.